சாட்சிய வாக்கு மூலம்

(அத்தியாயம் 25 பாரதிய நாகரிக் சுரக்ஷா சன்ஹிதா)

1989 ஆண்டு இயற்றப்பட்ட பட்டியல் சாதியினர் மற்றும் பழங்குடியினர்

( வன்கொடுமை தடுப்பு ) சட்டத்தின் கீழான

வழக்குகளை விசாரிப்பதற்கான சிறப்பு நீதிமன்றம் ,

திருவாரூர் - 610 001

தேதி: 26.02.2026

| | | |
|---|---|---|
| சிறப்பு அமர்வு வழக்கு எண். | : | **16/2025** |
| சாட்சியின் வரிசை எண். | : | அ.சா-13 |
| சாட்சியின் பெயர் | : | இளங்கோவன் |
| தந்தை பெயர் | : | அய்யாவு |
| கிராமம் | : | தஞ்சாவூர் |
| தாலுக்கா | : | தஞ்சாவூர் |
| தொழில் | : | காவல் உதவி ஆணையர் (ஓய்வு) |
| வயது | : | 61 |

2026 ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 26 ஆம் நாள் ஆகிய இன்று இந்த நீதிமன்றத்தில் இளநிலை உதவியாளராக பணிபுரியும் திரு.ஆர்.வீரபாண்டியன் அவர்களால் இந்த சாட்சிக்கு 1969-ம் ஆண்டு உறுதிமொழி சட்டத்தின் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு அதன் அடிப்படையில் சாட்சிய வாக்குமூலம் பதிவு செய்யப்படுகிறது.

1, 3 முதல் 6 எதிரிகள் ஆஜர். 2ம் எதிரி ஆஜரில்லை. மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

<u>**முதல் விசாரணை**</u>

நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். கடந்த 2022 ம் ஆண்டு நன்னிலம் காவல் சரகத்தில் துணை காவல் கண்காணிப்பாளராக பணிபுரிந்த காலத்தில், நன்னிலம் காவல் சரகத்திற்குட்பட்ட வலங்கைமான் காவல் நிலையத்தில் தாக்கலான புகாரை பெற்று அப்போதைய உதவி ஆய்வாளர் அ.சா.10 ராஜேஸ்குமார் என்பவர் வலங்கைமான் காவல் நிலைய குற்ற எண் 291/2022 ச/பி. 147, 148, 294 (b), 341, 324 of IPC r/w 3(1)(r), 3(1)(s), 3(2)(va) of SC/ST (PoA) Act. ன் கீழ்வழக்கு பதிவு செய்து, அப்போது பொறுப்பு துணை காவல் கண்காணிப்பாளராக இருந்த அ.சா.12 தமிழ்மாறன்அவருக்கு விசாரணை செய்ய மாவட்ட காவல் கண்காணிப்பாளரால் வழங்கப்பட்ட செயல்முறை ஆணையின்படி, அவர் முதல் விசாரணை செய்து சம்பவ இடத்திற்கு சென்று பார்வையிட்டு, பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்து, வழக்கின் 6 வது எதிரி பப்பி (எ) நீலமேகராஜ் என்பவரை கைது நீதிமன்றக் காவலுக்குட்படுத்தினார்.

2. இந்த வழக்கை நான், சிறு விடுப்பு முடித்து வந்து திருவாரூர் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அவர்களால் எனக்கு புலன் விசாரணை செய்வதற்காக வழங்கப்பட்ட செயல்முறை ஆணை எண் C.No. 34/ SJ & HR/TVR/2022 dated 05.05.2022 ன்படி மேற்படி உத்தரவினை பெற்று இவ்வழக்கை 06.05.2022 ம் தேதி எனது புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு சம்பவ இடமான வேலங்குடிக்கு சென்று சம்பவ இடத்தை பார்வையிட்டும் முதல் விசாரணை அதிகாரி விசாரித்த சாட்சிகளான அசோக், செல்வமணி, கலியமூர்த்தி, சுபிராஜ், ராசு, ஆகியோர்களை விசாரணை செய்து, மேற்படி சாட்சிகள் அனைவரும், முதல் விசாரணை அதிகாரியிடம் சொன்ன விபரங்களையே என்னிடம் சொன்னதால், நான் தனியாக வாக்குமூலங்களை பதிவு செய்யவில்லை.

3.பின்னர் இவ்வழக்கின் மற்ற எதிரிகளான சூர்யா, கவியரசன், அபினேஷ், செல்வராஜ், மாதவன் ஆகியோரை தேடி சுற்று புற

வட்டாரங்களில் தேடியும், எதிரிகளை விரைவில் கைது செய்ய நடவடிக்கை மேற்கொண்டேன். பின்னர் 15.05.2022 ம் தேதி இவ்வழக்கில் சம்மந்தப்பட்ட சாட்சிகள் மற்றும் எதிரிகளுக்கு சாதி சான்றிதழ்கள் கோரி வலங்கைமான் வட்டாச்சியர் அலுவலகத்திற்கு கடிதம் அனுப்பினேன். பின்னர் 27.05.2022 ம் தேதி இவ்வழக்கில் சம்பவத்தை கண்ணுற்ற சாட்சிகளான சுமித்ராஜ் மற்றும் அய்யப்பன் அவர்களை விசாரணை செய்து வாக்குமூலங்கள் பதிவு செய்தேன்.

பின்னர் 06.06.2022 ம் தேதி வலங்கைமான் வட்டாட்சியர் அலுவலகம் சென்று எதிரிகள் மற்றும் சாட்சிகளுக்கு சாதி சான்றிதழ்களை பெற்றேன். வட்டாட்சியர் சந்தானகோபாலகிருஷ்ணன், மற்றும் துணை வட்டாட்சியர் ஆனந்தன் ஆகியோர்களை தனித்தனியாக விசாரணை செய்து வாக்குமூலங்களை பதிவு செய்தேன்.

பின்னர், 15.06.2022 ம் தேதி இவ்வழக்கு தொடர்பாக சம்பவத்தினை கேள்வியுற்ற சாட்சியான ரக்கித் என்பவரை விசாரணை செய்து, வாக்குமூலம் பதிவு செய்தேன்.

பின்னர் 07.07.2022 ம் தேதி, இவ்வழக்கில் காயம்பட்ட சாட்சிகளுக்கு மருத்துவ சிகிச்சை அளித்த அரசு மருத்துவர் திருமதி. விமலா அவர்களை விசாரித்து வாதிகளுக்கு ஏற்பட்ட காயம் சொற்ப காயம் என சான்றுகளை வாங்கினேன். வாதிகளான அ.சா.1 கலியமூர்த்தி, அ.சா.2 ராசு, அ.சா.3 சுசீலா, அ.சா.4 சுபிராஜ் ஆகியோர்களுக்கு வழங்கப்பட்ட காயச்சான்றுகள் முறையே அ.சா.ஆ.15 முதல் அ.சா.ஆ.18 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது.

பின்னர் 13.07.2022 ம் தேதி வழக்கை பதிவு செய்த உதவி ஆய்வாளர் ராஜேஸ்குமார்என்பவரை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் அதே தேதியில் இவ்வழக்கின் புலன் விசாரணையை முடித்து எதிரிகள் மீது மேற்படி சட்டப்பிரிவுகளின் கீழ குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்தேன்.

என்னுடைய விசாரணையில், அ.சா.5 ராக்கித், அ.சா.6 அசோக், அ.சா.7 செல்வமணி ஆகியோர்கள் கூறியதைதான் நான் வாக்குமூலங்களாக பதிவு செய்தேன்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை** இல்லை.

சாட்சி சொல்ல சொல்ல என் உத்தரவுப்படி திறந்த நீதிமன்றத்தில் என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு பின் சாட்சியிடம் மேற்படி வாக்குமூலம் படித்துக் காண்பித்த போது சாட்சி சரியென்று என் முன்பாக கையொப்பம்செய்தார்.

VADIVEL M

Digitally signed by VADIVEL M
Date: 2026.02.26 18:09:35 +0530

அமர்வு நீதிபதி,
எஸ்.சி /எஸ்.டி (வன்கொடுமை தடுப்பு )
வழக்குகளை விசாரிப்பதற்கான சிறப்பு
நீதிமன்றம், திருவாரூர்.